DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.610/2025**

**P.W.2**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | கார்த்திகா |
| Husband Name | : | ஷியாம் ரஞ்சித் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.01.2026.

(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது பெருங்குடி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கூடக்கோவில் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 03.11.2024ம் தேதியன்று நானும், என்னுடன் சக போலீஸ் பார்ட்டிகளான **அ.சா.1** திரு. முருகன் தலைமை காவலர் 919 மற்றும் **சாட்சி எண்.1** ராஜபிரபு தலைமை காவலர் 158 ஆகியோர்களுடன் குற்ற தடுப்பு சம்மந்தமாக எலியார்பத்தி மற்றும் நெடுமதுரை பகுதிகளில் ரோந்து பணியில் இருந்த போது, காலை 10.00 மணியவில் நெடுமதுரை மந்தை பகுதியில் ரோந்து பணி செய்த போது, அங்கு நின்றுகொண்டிருந்த இரு நபர்கள்எங்கள் போலீஸ் பார்ட்டியை கண்டவுடன் ஓட முயற்சித்தவர்களை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது, தனது பெயர் அழகு ராஜா த/பெ. சந்தானம், வடக்கு தெரு, நெடுமதுரை என்றும் மற்றொரு நபர் தனது பெயர் அருண் த/பெ.ராமன் வடக்கு தெரு, நெடுமதுரை என்று கூறியவர்களை விசாரித்த போது, தன் முதுகு பின்னால் வைத்திருந்த வாளை எடுத்து காண்பிக்க அவர்களுக்கு தாங்கள் வைத்திருக்கும் வாள் சட்டத்திற்கு முரணானது என்று எடுத்துக்கூறி அவர்களை காலை 10.15 மணியளவில் கைது செய்து எந்த ஒரு அச்சுறுத்தலும்,

ஆசைவார்த்தையோ இன்றி அவர்களை விசாரித்த போது, அழகு ராஜா என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 10.30 மணியளவில் தயார் செய்து மற்றும் மற்றொரு நபர் அருண் அவரது உறவினர் என்பதால் அழகு ராஜா என்பவர் தனது சொந்த ஊரான நெடுமதுரையில் ஏற்கனேவ 2023ம் வருடம் நெடுமதுரை கிராமத்தில் அடிதடி வழக்கு ஒன்று உள்ளதாலும், மேலும் 2024ம் வருடம் தீபாவளி அன்று ஊரிலுள்ள ஜுவா என்பவருடன் சண்டை ஏற்பட்டு அவரால் தனது உயிருக்கு பாதுகாப்பு இல்லை என்று எண்ணி அவர் என்னை தாக்க வந்தால் அவருக்கு முன்னால் அவரை தாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாளை வைத்திருப்பதாகவும் அவருக்கு உதவியாக அழகு ராஜாவின் தங்கை செல்வி என்பவரை திருமணம் செய்த பெருமாள் என்பவரின் உடன்பிறந்த தம்பி அருண் என்பவர் அவருக்கு உதவியாக தானும் வாளை வைத்திருப்பதாக கூறி வாளை ஆஜர் செய்தவர்களை காலை 11.30 மணியளவில் அழகு ராஜா என்பவரிடம் அத்தாட்சியில் வாளை கைப்பற்றியும், 11.45 மணியளவில் அருண் என்பவரிடம் வாளை கைப்பற்றினேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1வது எதிரியின் அத்தாட்சி **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2வது எதிரியின் அத்தாட்சி **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பெரிய வாள் (சுமார் 70 செ.மீ நீளம்) **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பெரிய வாள் (சுமார் 79 செ.மீ நீளம்) **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் மற்றும் அத்தாட்சிகளிலும் எதிரிகளிடமிருந்து கையொப்பங்கள் பெற்றும் மற்றும் உடன் வந்த இரு காவலர்களான **அ.சா.1** திரு. முருகன் தலைமை காவலர் 919 மற்றும் **சாட்சி எண்.1** ராஜபிரபு தலைமை காவலர் 158 ஆகியோர்களிடமும் கையொப்பம் பெற்றும் எதிரிகளை 12.15 மணியளவில் காவல்நிலையம் கொண்டு வந்து

எதிரிகளை திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்தேன். பின்பு எதிரிகளின் மீது கூடக்கோவில் காவல்நிலைய குற்ற எண்.144/2024 பிரிவுகள் 25 (1A) Arms Actன் படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதித்துறை நடுவர், திருமங்கலம் அவர்களுக்கு கடந்த 03.11.2024ம் தேதி அனுப்பி வைத்துள்ளேன். மேற்படி படிவம் 91 (எண்ணம் 2) **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கு கோப்பினை திருமங்கலம் தாலுகா வட்ட காவல் ஆய்வாளர் திருமதி. அனுசாமனோகரி அவர்களின் மேற்பார்வைக்கு வைத்தேன். மேற்படி ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரிக்க நடந்த விபரம் சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

சம்பவ இடமான நெடுமதுரை மந்தை என்பது கூடக்கோவில் காவல்நிலையத்தில் இருந்து சுமார் 6 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். கூடக்கோவில் காவல்நிலையத்தில் இருந்து நெடுமதுரை மந்தை தெருவிற்கு செல்ல வேண்டுமென்றால் இரண்டு, மூன்று கிராமங்களை கடந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். நாங்கள் காவல்நிலையத்தில் இருந்து ரோந்து பணிக்கு சென்ற போது மணி சுமார் காலை 09.30 இருக்கும் என்றால் சரிதான். மேற்படி ரோந்து பணி குறித்து காவல்நிலைய பொது நாட்குறிப்பில் குறிக்கப்பட்டுள்ளதா என்றால், ஞாபகமில்லை. மேற்படி ரோந்து பணிக்கு செல்லும் போது காவல்நிலையத்தில் இருந்து வாக்கி டாக்கி மற்றும் இருசக்கர வாகனம் எடுத்துச்சென்றேன். என்னுடன் வந்த காவலர்கள் என்ன பொருட்கள் கொண்டு வந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் ஒரு தனி வாகனத்தில் சென்றேன். மற்ற இருகாவலர்கள் தனி வானத்தில் வந்தார்கள். நாங்கள் தனி தனி வாகனத்தில் சென்றதால் யார் முதலில் சென்றார்கள், அவர்களுக்கு எவ்வளவு துாரத்தில் நான் பின்னால் சென்றேன் என்ற விபரம் குறித்து ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை

என்றால் சொல்லவில்லை. நாங்கள் குற்ற தடுப்பு ரோந்திற்கு சென்றதால் பல்வேறு கிராமங்களுக்கு சென்று ரோந்து சென்றுவிட்டு தான் நெடுமதுரை கிராமத்திற்கு சென்றோம் என்றால் நாங்கள் பாரபத்தி, எலியார்பத்தி கிராமங்களின் வழியாக நெடுமதுரை கிராமத்திற்கு சென்றோம். ஆனால் ஆய்வாளர் விசாரணையில் நாங்கள் மேற்படி விபரத்தை சொல்லவில்லை. நாங்கள் சென்றதாக சொல்லப்படும் சமயத்தில் எதிரிகள் எந்த திசையை நோக்கி நின்றுகொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எதிரிகளை அடையாளம் கண்டு நாங்கள் மூவரும் ஆளுக்கு ஒரு திசையில் இருந்து வந்து எதிரிகளை பிடிக்க முயற்சி செய்யவில்லை. நெடுமதுரை கிராமம் என்பது சுமார் 1000 நபர்கள் வசிக்கும் கிராமம் என்றால் சரிதான். நெடுமதுரை மந்தை பகுதி என்பது அதிக ஆட்கள் நடமாட்ட பகுதி என்றால் சரிதான். நெடுமதுரை மந்தை பகுதியில் நிறைய கடைகள் மற்றும் வீடுகள் அதிகமாக உள்ளது என்றால், சரிதான். எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் சமயத்தில் அருகில் டீ கடையில் இருந்த நபர்களையோ அல்லது அருகிலுள்ள வீடுகளிலுள்ள நபர்களை சாட்சியாக இருக்க அழைத்தோம். ஆனால் அவர்கள் முன்வரவில்லை. மேற்படி சாட்சியாக இருக்க அழைத்த நபர்களின் பெயர், முகவரி குறித்த விபரங்களை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. மேற்படி நபர்களை சாட்சியாக இருக்க அழைத்தும் மறுத்த நிலையில் அவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால், இல்லை. மேற்படி எதிரிகளின் வீடுகள் நெடுமதுரை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் ஆயுதத்தில் கைப்பிடி உள்ளது என்பது குறித்து எதுவும் சொல்லப்படவில்லை என்றால், கைப்பிடி சம்மந்தமாக குறிப்பிட்டு சொல்லவில்லை, மொத்த நீளம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சொத்து பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதால் இந்த விபரம் குறித்து சொல்லப்படவில்லை என்றால் சம்பவ இடத்தில் பொருட்களை கைப்பற்றியதால் அதன் மொத்த நீளம் என்று

சொல்லப்பட்டுள்ளது. ஆய்வாளர் விசாரணையில் நாங்கள் ரோந்து சென்ற நேரத்தை காலையா அல்லது இரவா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், காலை நேரம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். மேலும் 2வது எதிரியிடமிருந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றால், சரிதான். மேலும் கூடக்கோவில் காவல்நிலையத்தில் இருந்து திருமங்கலம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், சுமார் 10 கி.மீ இருக்கும். மேற்படி காவல்நிலையத்தில் இருந்து திருமங்கலம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு இருசக்கர வாகனத்தில் சுமார் 20 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சுமார் 30 நிமிடத்தில் சென்றுவிடலாம். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை திருமங்கலம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இரவு 10.15 மணிக்கு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கை சுமார் 10 மணி நேர காலதாமதமாக திருமங்கலம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1வது எதிரியிடம் பெற்றதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் சம்பவ இடத்தில் வைத்து தான் பெறப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் யாரால் எழுதப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் வைத்து மடிக்கணினியில் பதிவு செய்யப்பட்டது. மேற்படி மடிக்கணினி யாருடைய மடிக்கணினி, யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்ற விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால், என்னால் தான் தட்டச்சு செய்யப்பட்டது ஆனால் மடிக்கணினி யாருடையது என்று சொல்லவில்லை. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகளின் கையொப்பம் முதல் பக்கத்தில் பெறப்படவில்லை. மேலும் அத்தாட்சிகள் யாரால் எழுதப்பட்ட என்ற விபரம் அத்தாட்சிகளில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். மேலும் ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது ஆனால் அத்தாட்சிகள் கையால் எழுதப்பட்டுள்ளது என்று என்ன காரணம் என்றால், காலதாமதம் ஏற்படாமல் விரைவாக முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒப்புதல் வாக்குமூலம்

தட்டச்சு முறையிலும், அத்தாட்சிகளை கையாலும் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கு வைத்து பிரிண்ட் செய்யப்பட்டது என்றால், என்னால் சம்பவ இடத்தில் வைத்து நான் கொண்டு சென்ற பிரிண்டர் மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது. மேற்படி பிரிண்டருக்கு மின்சாரம் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்ற விபரத்தை நான் காவல் ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிடவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் நாங்கள் ரோந்து எதுவும் செல்லவில்லை என்றும் எதிரிகளை சம்பவ இடத்தில் வைத்து பார்க்கவில்லை என்றும் எதிரிகளிடமிருந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலங்களும் பெறப்படவில்லை என்றும், அதன் அடிப்படையில் எந்த ஒரு அத்தாட்சியும் கைப்பற்றபடவில்லை என்றும் எங்களது காவல்நிலைய புள்ளி விபர கணக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. மேலும் நான் முதல் விசாரணையில் கூறிய 2024ம் வருடம் தீபாவளி அன்று ஜீவா என்பவருடன் 1வது எதிரிக்கு ஏற்பட்ட சண்டை சம்மந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், எனக்கு ஞாபகமில்லை. அதுசம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.01.08 15:56:36 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.